அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI





Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624


அ.எண் : 83/2017

தேதி : 05/09/2017

**ஆசிரியர் தினம்**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர், திரு.ஆர்.சரத்குமார் வாழ்த்து.**

சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த தினத்தை ஆசிரியர் தினமாக அறிவித்த நாள் முதல் இன்று வரை, செப்டம்பர் 5 ஆம் நாள் ஆசிரியர் தினமாக கொண்டாடுகிறோம். அவர் ஆசிரியராக இருந்து நமது நாட்டின் உயர்ந்த பதவியான குடியரசு தலைவராக பணியாற்றினார், ஆசிரியர் பணியின் புனிதத்துவதை விளக்குவதற்கும், ஆசிரியரும் மிக உயர்ந்த பதவி வகிக்க முடியும் என்பதை உலகத்திற்கு காட்டுவதற்கும் எடுக்கப்பட்ட ஒரு நல்ல முடிவாக நான் பார்க்கிறேன்.

ஆனால் மற்ற துறைகளில் உள்ள வல்லுநர்களுக்கு கொடுக்கப்படும் அளவுக்கு மதிப்பும் மரியாதையும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால், சில இடங்கள் தவிர்த்து இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு சமுதாயத்தையே, ஏன் ஒரு நாட்டின் எதிர்காலத்தையே உருவாக்கும் இளைஞர்களை உருவாக்குவதில் பெரும்பங்கு ஆசிரியருக்குத்தான் உள்ளது. அப்படிப்பட்ட ஒரு உயர்ந்த பதவிக்கு அவர்கள் தங்களது அன்றாட தேவைகளுக்கு போராட வேண்டிய சூழல் உருவாக்கப்பட கூடாது. தங்களது மாணவர்களின் வெற்றிகரமான எதிர்காலம் மட்டுமே அவர்கள் நோக்கமாக இருக்கவேண்டும். அந்த அளவிற்கு அவர்களது பொருளாதார தேவைகள் பூர்த்திசெய்யப் படவேண்டும்.

இன்றைய மாணவர்கள் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக அதீத புத்திசாலியாக இருக்கிறார்கள். இவர்களுக்கு அறிவுரை கூறி வகுப்பறையில் மாணவர்களின் கிண்டலுக்கும் கேலிக்கும் செவி சாய்க்காமல், அவர்களை கட்டுக்குள் வைத்து பாடத்திட்டத்தில் குறிப்பிட்ட அனைத்து பாடங்களையும் கற்பித்து, மேலும் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து நற்பண்புகளையும் சொல்லிக்கொடுக்கவேண்டிய சவால், அழுத்தம் ஆசிரியர்களுக்கு உள்ளது. இவர்களுக்கு தனிப்பட்ட வாழ்க்கையில் எந்த ஒரு அழுத்தமும் இல்லாவிட்டால்தான், அவர்களால் மிக சிறந்த ஆசிரியர்களாக திகழமுடியும்.


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

இதற்கு மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் ஒரு தொலை நோக்கு சிந்தனையுடன் ஆசிரியர்களின் வாழ்க்கை தரம் உயரவும், அவர்கள் தங்களது அறிவை மேலும் மேலும் தொடர்ந்து மேம்படுத்திக்கொள்ளவும் திட்டங்களை தீட்டி, ஊக்குவித்தால் மட்டுமே, எதிர்வரும் மாணவ சமுதாயம் இந்தியாவின் பெருமையை உலகில் பறை சாற்றமுடியும்.

அனைத்து சமுதாய இன்னல்களுக்கும் காரணம் மனிதர்களிடம் வாழ்க்கையை பற்றிய சரியானதொரு புரிதலும் அணுகுமுறையும் இல்லை. இதை சரிசெய்ய வேண்டுமெனில் நமக்கு உயர்ந்த ஆசிரியர்கள் வேண்டும். உயர்ந்த தரத்தில் ஆசிரியர்கள் உருவாக்குவதை அரசாங்கம் கவனத்துடன் கையாளவேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி அவர்களின் பணிகள் தங்களுடைய அறிவை மேம்படுத்தி தனது மாணவர்களின் அறிவையும் மேம்படுத்தவே இருக்கவேண்டும். வளர்ந்த நாடுகளில் உள்ள திட்டங்களில் அவர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கும்வகை செய்யவேண்டும். அவர்கள் அடிப்படை பொருளாதாரத்திற்காக போராடும் நிலை மாற்றப்படவேண்டும்.

எழுச்சி மிகு இந்தியாவை வளர்ச்சிமிகு இந்தியாவாக உருவாக்குவதற்கு ஆசிரியர்களின் பங்கு மிகப்பெரியது. ஆசிரியர்களை உருவாக்குவதில் அரசாங்கத்தின் பங்கு மிகப் பெரியது. அரசாங்கத்தை உருவாக்குவதில் மக்களாகிய நமது பங்கு அளப்பரியது. எனவே நம்மிடம் இருந்து மாற்றத்தை ஆரம்பிப்போம். ஒரு புது இந்தியாவை படைப்போம்

அடுத்த ஆசிரியர் தினத்தில் நாம் அனைவரும் அமைதி நிறைந்த பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களை உருவாக்க முயல்வோம்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
தலைவர் - பொதுச்செயலாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com